# அரையாண்டு பொதுத் தேர்வு - 2019

## ஒன்பதாம் வகுப்பு

பதிவு எண் : | | | | | | |

## சமூக அறிவியல்

நேரம்: 2.30 மணி

மதிப்பெண்கள்: 100

### பகுதி - I

14 x 1 = 14

I. சரியான விடையைத் தேர்ந்தெடுத்து எழுதுக:

1. சங்க காலத்தில் பயன்படுத்தப்பட்ட எழுத்து முறை யாது?
   a) ஆங்கிலம் b) தேவநாகரி c) தமிழ்-பிராமி d) கிரந்தம்
2. கிரேக்கர்களின் மற்றொரு பெயர் ________.
   a) ஹெலனிஸ்டுகள் b) ஹெலனியர்கள் c) பீனிசியர்கள் d) ஸ்பார்ட்டன்கள்
3. கிருஷ்ணதேவராயர் ________ ன் சமகாலத்தவர்.
   a) பாபர் b) ஹுமாயுன் c) அக்பர் d) ஷெர்ஷா
4. கீழ்க்கண்டவர்களில் யார் மனித நேயத்தின் தந்தை என்று அழைக்கப்படுகிறார்?
   a) லியானார்டோ டாவின்சி b) ப்ரான்சிஸ்கோ பெட்ரார்க்
   c) எராஸ்மஸ் d) தாமஸ் மூர்
5. சரியான கூற்றைத் தேர்ந்தெடுக்க:
   கூற்று : பௌத்த மதம் இந்தியாவிலிருந்து சீனாவிற்குச் சென்றது.
   காரணம் : சீனாவில் தொடக்க காலத்தில் குடியேறிய இந்தியர்கள் பௌத்த மதத்தைப் பின்பற்றியவர்கள்.
   a) கூற்று சரி, காரணம் தவறு b) கூற்றும் காரணமும் தவறு
   c) கூற்றும் காரணமும் சரியானவை d) கூற்று தவறு, காரணம் கூற்றுக்கு தொடர்பற்றது
6. கீழ்க்கண்டவற்றுள் எது இரண்டாம் நிலை நிலத்தோற்றம்?
   a) ஆசியா b) தக்காண பீடபூமி c) குலு பள்ளத்தாக்கு d) மெரினா கடற்கரை
7. புவியின் குளிர்ச்சியான பல்லுயிர்த் தொகுதி
   a) தூந்திரா b) டைகா c) பாலைவனம் d) பெருங்கடல்கள்
8. கடல் நீரோட்டங்கள் உருவாகக் காரணம்
   a) புவியின் சுழற்சி b) வெப்பநிலை வேறுபாடு
   c) உவர்ப்பிய வேறுபாடு d) மேற்கண்ட அனைத்தும்
9. வளிமண்டலத்திலுள்ள பசுமைக்குடில் வாயுக்களால் படிப்படியாக அதிகரிக்கும் புவி வெப்பத்தை ________ என்கிறோம்.
   a) அமில மழை b) வெப்ப மாசுறுதல் c) புவி வெப்பமாதல் d) காடுகளை அழித்தல்
10. i) 'T' வடிவ பள்ளத்தாக்கு ஆறுகளின் அரித்தல் செயலால் உருவாகிறது.
    ii) 'U' வடிவ பள்ளத்தாக்கு பனியாறுகளின் அரித்தல் செயலால் உருவாகிறது.
    iii) 'V' வடிவ பள்ளத்தாக்கு பனியாறுகளின் அரித்தல் செயலால் உருவாகிறது.
    a) i, ii மற்றும் iii சரி b) i, ii சரி
    c) i மற்றும் iii சரி d) ii மட்டும் சரி
11. குடவோலை முறையை பின்பற்றியவர்கள்
    a) சேரர்கள் b) பாண்டியர்கள் c) சோழர்கள் d) களப்பிரர்கள்
12. ________ க்கான நோபல் பரிசு கைலாஷ் சத்யார்த்தி மற்றும் மலாலாவிற்கு கொடுக்கப்பட்டது.
    a) இலக்கியம் b) அமைதி c) இயற்பியல் d) பொருளாதாரம்
13. பின்வருவனவற்றுள் எது இரண்டாம் துறையைச் சார்ந்ததல்ல?
    a) கட்டுமானம் b) உற்பத்தி c) சிறு தொழில் d) காடுகள்
14. ________ வருவாயை தலா வருமானம் என்று அழைக்கிறோம்.
    a) சராசரி b) மொத்த c) மக்கள் d) மாத

## பகுதி - II

**II. எவையேனும் 10 வினாக்களுக்கு விடையளி:** *(வினா எண். 28 கட்டாய வினா)* 10 x 2 = 20

15. ஹமுராபியின் சட்டம் முக்கியமான சட்ட ஆவணமாகும். - விவரி.
16. மும்மணிகள் (திரி ரத்னா) - இச்சொல்லை விளக்கிக் கூறுக.
17. ரோமானிய அடிமை முறையைப் பற்றி எழுதுக.
18. மறுமலர்ச்சியின் விளைவுகள் பற்றி சிறுகுறிப்பு வரைக.
19. 'கொலம்பியப் பரிமாற்றம்' என்றால் என்ன?
20. ஆழிப்பேரலைகள் என்றால் என்ன?
21. இந்தியாவில் காணப்படும் ஏதேனும் நான்கு சுண்ணாம்புப் பாறை பிரதேசங்களைப் பட்டியலிடுக.
22. சிறுகுறிப்பு வரைக : அ) வியாபாரக் காற்றுகள் ஆ) கர்ஜிக்கும் நாற்பதுகள்
23. கடலடி நிலத்தோற்றங்கள் யாவை?
24. அடிப்படை உரிமைகள் யாவை?
25. கூட்டாட்சி முறையின் நிறைகள் யாவை?
26. பொருளாதார மேம்பாட்டின் குறியீடுகள் என்ன?
27. சிறு மற்றும் குறு விவசாயிகளை வேறுபடுத்துக.
28. உயர் சிந்தனை வினா:

    பாலைவனங்களில் சமன்படுத்துதலின் ஒரே காரணி காற்றாகும். - ஏன்?

## பகுதி - III

**III. எவையேனும் 10 வினாக்களுக்கு விடையளி:** *(வினா எண். 42 கட்டாய வினா)* 10 x 5 = 50

29. கோடிட்ட இடங்களை நிரப்புக:
    - i) _______ என்பது மனிதத் தலையும், சிங்க உடலும் கொண்ட கல்லால் ஆன மிகப்பெரிய உருவம் ஆகும்.
    - ii) இந்தியாவின் மேற்குக் கடற்கரைக்கு வந்த ஐரோப்பியர் _______.
    - iii) காற்றின் செங்குத்து அசைவினை _______ என்று அழைக்கிறோம்.
    - iv) தேசிய மனித உரிமை ஆணையம் _______ ஆண்டு அமைக்கப்பட்டது.
    - v) _______ எப்போதும் இந்தியாவின் வளர்ச்சிக் கொள்கையில் ஒரு முக்கிய உறுப்பாக இடம் பெற்றுள்ளது.
30. பொருத்துக:
    - i) மொகஞ்சதாரோ - முதல் தீர்த்தங்கரர்
    - ii) போர்ச்சுக்கீசியர்கள் - ஏதென்ஸ்
    - iii) ஜீயஸ் - அரேபிய இரவுகளின் நகரம்
    - iv) ரிஷபா - கோவா
    - v) பாக்தாத் - பெருங்குளம்
31. பொருத்துக:
    - i) கூட்டு எரிமலை - கீற்று மேகம்
    - ii) பெண் குதிரை வால் - ஒலி மாசுறுதல்
    - iii) காளான் பாறை - ஆஸ்திரேலியா
    - iv) கிரேட் பேரியர் ரீப் - எரிமலை வெடிப்பு
    - v) ஒலிபெருக்கி - ஏயோலியன்
32. a) வேறுபடுத்துக:
    - i) நிலக்காற்று - கடல் காற்று ii) சவானா - தூந்திரா

    b) காரணம் கூறுக : உற்பத்தியாளர்கள் தற்சார்பு ஊட்ட உயிரிகள் என்று அழைக்கப்படுகின்றன.

33. ஹைரோகிளிபிக்ஸ், க்யூனிபார்ம் - இவற்றை, அவற்றின் முக்கியமான கூறுகளுடன் விளக்குக.
34. புவியியல்சார் கண்டுபிடிப்புகளின் விளைவுகள் குறித்து ஆய்க.
35. பனியாறு என்றால் என்ன? அதன் வகைகளை விளக்குக.
36. மக்கள் தொகைப் பரவலைப் பாதிக்கும் காரணிகள் யாவை?
37. இந்தியாவில் மக்களாட்சி வெற்றிகரமாகச் செயல்படத் தேவையான நிபந்தனைகளை விளக்குக.
38. தேசிய மனித உரிமைகள் ஆணையம் நம் உரிமைகளை எவ்வாறு பாதுகாக்கிறது?
39. நிலையான மேம்பாட்டிற்கான கொள்கைகளை விவரி.
40. பணத்தின் செயல்பாடுகளைப் பட்டியலிடுக.
41. கி.பி. (பொ.ஆ) 1450 முதல் கி.பி. (பொ.ஆ) 1500 வரையில் நடைபெற்ற ஏதேனும் ஐந்து முக்கிய நிகழ்வுகளைக் காலக்கோட்டில் குறிக்க.
42. உலக வரைபடத்தில் குறிக்க:
   - i) கான்ஸ்டான்டி நோபிள்
   - ii) அலெக்சாண்டிரியா
   - iii) பாரசீகம்
   - iv) அரேபியா
   - v) ரோம்

## பகுதி - IV

43. தலைப்பு வினா : இரு தலைப்புகளுக்கு விடையளிக்க. 2 x 4 = 8
   - a) தொடக்க கால நாகரிகம்:
     - i) நாகரிகம் என்றால் என்ன?
     - ii) தொடக்க கால நாகரிகங்களின் பெயர்களை எழுதுக.
     - iii) பெரும்பாலான மக்களுக்கு வாழ்வாதாரமாக இருந்தவை எவை?
     - iv) நாகரிகம் வடிவம் பெறத் தொடங்கியபோது என்ன நடந்தது?
   - b) ஜொராஸ்ட்ரியனிசம்:
     - i) இதைத் தோற்றுவித்தவர் யார்?
     - ii) அவர் 'ஒளியின் கடவுள்' என யாரைப் பிரகடனம் செய்தார்?
     - iii) ஜொராஸ்டர் எதனைப் போதித்தார்?
     - iv) வழிபாட்டின் உயர்ந்த வடிவம் எது?

*(அல்லது)*

   - c) ஜப்பானின் சோகுனேட்கள்:
     - i) ஜப்பானில் பதவிக்காக சண்டையிட்டுக் கொண்ட டய்ம்யாஸ் குடும்பங்கள் இரண்டைக் குறிப்பிடுக.
     - ii) இப்போரில் வெற்றி பெற்றவர் யார்?
     - iii) பேரரசர் வெற்றி பெற்றவருக்கு கொடுத்த பட்டம் என்ன?
     - iv) முதல் சோகுனேட்டின் தலைநகர் எங்கே நிறுவப்பட்டது?
   - d) புவியியல்சார் கண்டுபிடிப்புகள்:
     - i) மாலுமி ஹென்றி என்பவர் யார்?
     - ii) புவியியல்சார் கண்டுபிடிப்புகளுக்கான காரணங்களை வரிசைப்படுத்துக.
     - iii) அமெரிக்காவில் உள்ளூர் மக்களின் அழித்தொழிப்புக்கு இட்டுச் சென்றது எது?
     - iv) முக்கோண வர்த்தகம் என்றால் என்ன?

44. கொடுக்கப்பட்டுள்ள தமிழ்நாடு வரைபடத்தில் குறிக்க: 8 x 1 = 8
   - i) ஒரு பெருநகரம்
   - ii) மன்னார் வளைகுடா
   - iii) சதுர கி.மீ-ல் 7857 மக்கள் வாழும் ஒரு மாவட்டம்
   - iv) பாக் நீர்ச்சந்தி
   - v) இந்தியப் பெருங்கடல்
   - vi) வங்காள விரிகுடா
   - vii) கன்னியாகுமரி
   - viii) சென்னை

*****